# 6th Social Science Lesson 20 Questions in Tamil - புவியியல்

## 3. வளங்கள்

1. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. பணமதிப்புள்ள வளங்கள் – (எ.கா) பெட்ரோலியம்
2. பணமதிப்பற்ற வளங்கள் – (எ.கா) காற்று
A) இரண்டும் சரி
B) 1 மட்டும் சரி
C) 2 மட்டும் சரி
D) இரண்டும் தவறு

2. ஒரு பொருளை வளமாக மாற்றுவதற்கான காரணிகள் எவை?
1. பயன்பாடு 2. காலம் 3. தொழில்நுட்பம்
4. பரவல் 5. வளர்ச்சி நிலை
A) 1, 2, 3
B) 1, 4, 5
C) 4, 5
D) 2, 3

3. மணல் என்ற இயற்கை வளத்திலிருந்து __________ என்ற தனிமத்தை பிரித்து அதிலிருந்து PV செல்களை பயன்படுத்தி ஒளி மின்னழுத்தக் கலம் தயாரிக்கப்படுகிறது.
A) யுரேனியம்
B) தோரியம்
C) சிலிக்கான்
D) சோடியம்

4. வளங்கள் எத்தனை வகைப்படும்?
A) 2
B) 3
C) 4
D) 5

5. காற்று, நீர், மண், கனிமங்கள், நம்மைச் சுற்றியுள்ள இயற்கைத் தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்தும் __________ வளங்கள்.
A) கண்டறியப்பட்ட வளங்கள்
B) மறைந்திருக்கும் வளங்கள்
C) மனித வளங்கள்
D) இயற்கை வளங்கள்

6. இயற்கை வளங்களின் பயன்பாடு கீழ்க்கண்ட எவற்றை சார்ந்திருக்கும்?
1. காணப்படும் இடம்
2. காணப்படும் நிலை
3. பயன்பாட்டிற்கு கொண்டு வரும் தொழில்நுட்பம்
4. தொழிலாளர்கள்
A) அனைத்தும்
B) 1, 2, 4
C) 2, 3, 4
D) 1, 2, 3

7. தோற்றத்தின் அடிப்படையில் வளங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
1. உயிரியல் வளங்கள்
2. உயிரற்ற வளங்கள்
3. கண்டறியப்பட்ட வளங்கள்
4. மறைந்திருக்கும் வளங்கள்
A) 1, 3
B) 3, 4
C) 1, 2
D) 2, 4

8. கூற்று 1: பழங்கால மனிதன் மாற்று வளங்களை தேடி புவியைத் தோண்டும்போது முதலில் தாமிரத்தையும் பின்பு இரும்பையும் கண்டுபிடித்தான்.
கூற்று 2: உலகில் காணப்படும் உயிருள்ள பொருள்கள் மனிதனால் அடையாளம் காணப்பட்ட பிறகுதான் உயிரியல் வளங்களாக அறியப்பட்டன.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

9. கீழ்க்கண்டவற்றுள் முதல்நிலை செயல்பாடுகள் எவை?
1. வேட்டையாடுதல் 2. உணவு சேகரித்தல்
3. மீன்பிடித்தல் 4. காட்டு வளங்களை சேகரித்தல்
A) அனைத்தும்
B) 1, 3
C) 1, 2, 4
D) 1, 4

10. வளர்ச்சி நிலையின் அடிப்படையில் வளங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
1. புதுப்பிக்கக்கூடிய வளங்கள்
2. புதுப்பிக்க இயலா வளங்கள்
3. கண்டறியப்பட்ட வளங்கள்
4. மறைந்திருக்கும் வளங்கள்
A) அனைத்தும்
B) 1, 2
C) 3, 4
D) 1, 4

11. கூற்று 1: கடல் ஈஸ்ட்டானது நிலப்பரப்பிலுள்ள ஈஸ்டைவிட மிகுந்த ஆற்றல் உடையது.
கூற்று 2: கடல் ஈஸ்ட் ரொட்டித் தயாரித்தல், மது வடித்தல், திராட்சை ரசம் தயாரித்தல், உயிரி எத்தினால் தயாரித்தல் மற்றும் மருத்துவப்புரதம் தயாரித்தலுக்குப் பயன்படுகிறது.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

12. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.
A) ஒரு முறை பயன்படுத்தப்பட்ட வளங்கள் பின்னர் கால சுழற்சிக்கு ஏற்ப புதுப்பித்துக் கொள்ள இயலும் தன்மையுடைய வளங்கள் புதுப்பிக்கக் கூடிய வளங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
B) புதுப்பிக்கக்கூடிய வளங்களைத் தவறாக பயன்படுத்தினாலும் குறைவதற்கு வாய்ப்புகள் இல்லை.
C) குறிப்பிட்ட அளவில் உள்ள அனைத்து வளங்களும் புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும்.
D) புதுப்பிக்க இயலா வளங்கள் உருவாக நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும்.

13. கீழ்க்கண்டவற்றுள் பயன்பாட்டிற்கு வராத வளம் அல்லது மறைந்திருக்கும் வளம் எது?
A) நிலக்கரி
B) பெட்ரோலியம்
C) கனிமங்கள்
D) காற்றாற்றல்

14. கூற்று 1: ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படும் வளங்கள் உள்ளூர் வளங்கள் என்கிறோம்.
கூற்று 2: உலகின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் வளங்கள் உலகளாவிய வளங்கள் எனப்படும்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

15. உரிமையின் அடிப்படையில் வளங்கள் எத்தனை வகைப்படும்?
A) 2
B) 3
C) 4
D) 5

16. தவறான இணையைத் தேர்ந்தெடு.
A) தனிநபர் வளங்கள் – (எ.கா) அடுக்குமாடிக் கட்டடங்கள்
B) சமூக வளங்கள் – (எ.கா) கனிமங்கள்
C) நாட்டு வளங்கள் – இந்தியாவின் வெப்பமண்டல மழைக்காடுகள்
D) பன்னாட்டு வளங்கள் – (எ.கா) திமிங்கல புனுகு

17. "உலகின் பெரும் மருந்தகம்" என்று அழைக்கப்படும் காடுகள் எவை?
A) சதுப்பு நிலக் காடுகள்
B) முட்புதர்க்காடுகள்
C) பசுமை மாறாக் காடுகள்
D) வெப்ப மண்டல மழைக்காடுகள்

18. கூற்று 1: ஸ்பெர்ம் திமிங்கலத்தில் இருந்து பெறப்படும் ஒரு வகை திடப்பொருளே திமிங்கலப்புனுகு ஆகும்.
கூற்று 2: ஒரு பவுண்டு (0.454 கி.கி) திமிங்கலப் புனுகின் விலை 63,000 அமெரிக்க டாலர் மதிப்புடையதாகும்.
A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

19. இயற்கையிலிருந்து புதிய வளங்களை உருவாக்கும் தனிநபர் குழுக்கள் ____________ என அழைக்கப்படுகிறது.
A) ஆராய்ச்சியாளர்கள்
B) சமூக சேவகர்கள்

C) நற்சிந்தனையாளர்கள்

D) மனிதவளம்

20. மூலப்பொருள்களிலிருந்து வேறு பயன்பாட்டுப் பொருள்களாக மாற்றும் செயல்பாடு __________ எனப்படும்.

A) முதல் நிலை செயல்பாடுகள்

B) இரண்டாம் நிலை செயல்பாடுகள்

C) மூன்றாம் நிலை செயல்பாடுகள்

D) நான்காம் நிலை செயல்பாடுகள்

21. வங்கி, வணிகம் மற்றும் தகவல் தொடர்புத் துறை ஆகியவை எந்த வகை செயல்பாட்டிற்கு எடுத்துக்காட்டுகளாகும்

A) முதல் நிலை செயல்பாடுகள்

B) இரண்டாம் நிலை செயல்பாடுகள்

C) மூன்றாம் நிலை செயல்பாடுகள்

D) நான்காம் நிலை செயல்பாடுகள்

22. ஒரு நாட்டின் மனித வளம் கீழ்க்கண்ட எவற்றைச் சார்ந்துள்ளது?

1. அந்நாட்டிலுள்ள நிறுவனங்கள்

2. அமைப்புகளின் எண்ணிக்கை

3. தரம்

A) அனைத்தும்

B) 1, 2

C) 2, 3

D) 1, 3

23. "வளங்கள் மனிதனின் பேராசைக்கு அன்று, அவனது தேவைக்கு மட்டுமே" என்று கூறியவர்

A) வல்லபாய் படேல்

B) நேரு

C) காந்தி

D) இந்திரா காந்தி

24. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) வளத்திட்டமிடுதல் என்பது வளங்களை சரியாக பயன்படுத்தும் திறன் ஆகும்.

B) வளங்களை கவனமாக கையாளுதல் என்பது மறுசுழற்சி எனப்படுகிறது.

C) நிகழ்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருங்காலத் தலைமுறையினருக்கும் போதுமான வளங்களை விட்டு வைத்து, சமநிலைத் தன்மையோடு ஏற்படும் வளர்ச்சியே நிலையான வளர்ச்சி எனப்படும்.

D) வளங்களை பாதுகாக்க வேண்டுமெனில் குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி செய்தல் ஆகிய மூன்று வழிமுறைகளை (3RS) பின்பற்ற வேண்டும்.

25. "கேடறியாக் கெட்ட இடத்தும்---------- நாடென்ப நாட்டின் தலை"

என்ற குறளில் கூறப்படுவது

A) அரசின் வரி விதிப்பு முறை

B) மக்களின் பொருளாதார நிலை

C) மக்களின் கல்வி

D) நாட்டின் வளம்